உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி 23வெள்ளிக்கிழமை(09-10-1998) UTHAYAN -- A Lively National Tamil Daily சுடர்:270

பரந்தன், கிளிநொச்சி சமர்களில்

இறந்த மற்றும் காணாமற்போன படையினரின் எண்ணிக்கை 975!

அப்ப நாடாளுமன்றில் விஷயம் இளறப்பட முன் முந்தி விட்டினம் போல ... !

அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 9

பரந்தனிலும், கிளிநொச்சியிலும் கடந்த 27 ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெற்ற சமர்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமற்போன படையினரின் மொத்த எண்ணிக்கை 975 என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

புலிகள் தரப்பில் 717 பேர் உயிரிழந்த தாகவும் ஆயிரத்து 100 பேர் காயமடைந்ததாகவும் தகவல் கிடைத்திருப்பதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரந்தன், கிளிநொச்சி சமர்களில் உயிரிழந்த படையினர் 186 பேர் என்றும்— அவர்களில் நால்வர் அதிகாரிகள் தரத்தில் உள்ளவர்கள் என்றும் —

காணாமற் போனோரில் 18 அதிகாரிகளும் ஏனைய தரங்களைச் சேர்ந்த 771 படையினரும் அடங்கி இருப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் சுவரொட்டி!

யாழ்ப்பாணம், ஒக். 9

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கண்டிக்கும் தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான சுவரொட்டிகள் நேற்று முன்தினம் அதிகாலை முதல் யாழ். நகரின் நவீன சந்தை மற்றும் இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண மக்களின் பெயரிலும், குடாநாட்டு மக்களின் பெயரிலும் இச்சுவரொட்டிகள் வெளியிடப்பட்டதாக அவற்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அனேகமான சுவரொட்டிகள், 'லயன் ஏயர்' விமானத் தாக்குதலுக்குப் புலிகளே பொறுப்பானவர் எனக் தெரிவிக்கும் விதத்தில் அச் செய

வடக்கு-கிழக்குக் கடலில் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 9

வடக்கு — கிழக்கில் கடற்படையினர் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் கடல் மூலமான விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையின் நோக்கம் எனவும்—

விடுதலைப் புலிகள் தமது உறுப்பினர்களை ஓர் இடத்தில் இருந்து வேறோர் இடத்துக்கு இடம் மாற்றுவதற்கு வடக்கு—கிழக்குக் கடற்பகுதியையே பயன் படுத்துகின்றனர் எனவும்—

எனவே இத்தகைய காரணங்களினாலேயே இக்கடற் பகுதி படையினரால் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கடற்படை அதிகாரி தயாசந்திரசிறி தெரிவித்தார். (இ-7)

பிரதேச சபை உபதலைவர் ராஜினாமா!

நெல்லியடி, ஒக். 9

வடமராட்சி (கரவெட்டி) தெற்கு மேற்கு பிரதேச சபை உபதலைவர் வைத்திலிங்கம் விநாசித்தம்பி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாக அறிவித்துள்ளார்.

ச.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினரான இவர் கடந்த ஐந்து மாத காலமாக உபதலைவராகப் பதவி வகித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

வன்னிச்சமர் குறித்து நாடாளுமன்றில் இன்று கேள்வி எழுப்பப்படலாம்!

அவசரகாலச் சட்டம் நீடிப்பு விவாதம்

கொழும்பு, ஒக். 9

நாடு முழுவதும் அவசரகால விதிகளை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம் சண்டைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் காரசாரமாக கேள்விகளை இன்றைய விவாதத்தில் எழுப்புவர் என கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் விவாதத்தில் பேசவிருக்கும் அதன் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன், இழப்புகளையே

(10 ஆம் பக்கம் பார்க்க)

படை இழப்புக் குறித்து விசாரிக்க மூவர் குழு

ராணுவத்தளபதி நியமித்தார்

கொழும்பு, ஒக் 9

பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் இம்மையில் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து விசாரணை நடத்த மூன்று இராணுவ அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி தொரான் தளுவத்த இக்குழுவை நியமித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதியாகவும், கொழும்பு நகரின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவும், இராணுவ தனிக்கை பிரிவிற்குப் பொறுப்பாகவும் உள்ள மேஜர் ஜெனரல் சதிஷ் ஜெயசுந்தர இந்த விசாரணைக் குழுவிற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப குழு விசாரணை நடத்தி அறிக்கை ஒன்றை இராணுவத் தளபதிக்கு சமர்ப்பிக்கும். (இ-10-7)

மூன்னேஸ்வரம் கோயில்

விநாயகர் சிலை மீட்பு பௌத்த பிக்கு கைது!

கொழும்பு, ஒக். 9

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிலாபம் முன்னேஸ்வரம் சிவன் கோயிலில் இருந்து காணாமற் போன பஞ்ச உலோகத்தினாலான விலை மதிப்பற்ற விநாயகர் சிலை சிலாபம் பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சிலையைக் களவாடினார் என்ற சந்தேகத்தின் பேரில் பௌத்தபிக்கு ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பனாகொடையைச் சேர்ந்த விசுதிதானந்ததேரர் என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

5 படையினரின் சடலங்கள் நேற்று ஒப்படைப்பு

வவுனியா, ஒக். 9

மாங்குளத்துக்கு வடக்கே கனகராயன் ஆற்றுப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சண்டையில் கைப்பற்றியதாகத் தெரிவித்து 5 படையினரின் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்ததாகவவுனியாவுக்குசிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சண்டையில் தமது தரப்பில் 16 உறுப்பினர்கள் மரணமானதாக ஏற்கனவே புலிகளால் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-3-164)

புளொட் உறுப்பினர் மீது மன்னாரில் துப்பாக்கிச் சூடு

வவுனியா, ஒக். 9

மன்னார் நகரில் நேற்றிரவு 7.45 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் புளொட் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

செஸ்தியார் ஆலயத்துக்கு முன்பாக இடம் பெற்ற இச்சம்பவத்தில் டெனிடயஸ் என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மன்னார் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (இ-3-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

திருமதி துரைசிங்கம் இராசலட்சுமி

அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி துரைசிங்கம் இராசலட்சுமி 07—10—1998 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் 8-10-98 வியாழக் கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.சந்திரசேகரம் (சின்னமணி)
(மருமகன்)

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (59748)

விஜயரெட்ணம் பரமேஸ்வரி

(வேலணை, 5 ஆம் வட்டாரம்)

வேலணை, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட விஜயரெட்ணம் பரமேஸ்வரி 04—10—1998 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ் சென்றவர்களான காராளசிங்கம் தில்லைவனம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ் சென்ற மருதையினார் (நெடுந்தீவு) சிவனந்தங்கம ஆவர்களின் அன்பு மருமகளும், மருவிஜயரெட்ணம் (கல்விக் கோட்டம், வேலணை) அவர்களின் அன்பு மனைவியும் கார்த்திகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கலைப்பிரியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சாரங்கன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமிர்தவல்லி, (கனடா), பொன்னம்பலம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), புவனேஸ்வரி, மரகதவல்லி, இராசேஸ்வரி (கனடா), கணேசலிங்கம் (கிராம அலுவலர் வேலணை கிழக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம்சென்ற இராசரெத்தினம்(புவியங்கூடல்), சாந்தி சறோஜினி (தொலைத் தொடர்பு திணைக்களம், வவுனியா), தேவராசா (வர்த்தகர், மாவத்தகம), மார்க்கண்டு (கனடா), ஆனந்தி (ஆசிரியை, இந்து த.க. பாடசாலை நல்லூர்), திரு சிவபூசணம் (துணுக்காய்), வே. நேசமலர் (துணுக்காய்), செ. புனிதவதி (நெடுந்தீவு), மருபுஸ்பநாதன (நெடுந்தீவு), ம. வடிவேல் (இந்தியா), காலஞ்சென்ற மருசுபரெட்ணம் ஆகியோரின் மைத்துனியும், மேகலா (கனடா), ராதிகா (ஜேர்மனி), வசந்தன் (கனடா), மைதிலி (ஆசிரியை, ஆணைப்பந்தி மெ.தா.க. பாடசாலை), வாகீசன், மயூரி (கனடா), வைதூரி (கனடா), தினேஷ் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும், சர்மிளா, அனுஷா, நோசான், பிரசாத் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனரது இல்லத்தில் இன்று (09-10-98) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1-00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ம. விஜயரட்ணம்
(கல்விக்கோட்டம், வேலணை),
கா. பொன்னம்பலம்
(ஓய்வு பெற்ற தபாலதிபர்),
கா. கணேசலிங்கம்
(கிராம அலுவலர், வேலணை கிழக்கு).

16/21, சிவன்லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(நேசிங் கோம் அருகில்) (59768)

திருமதி இராசநாயகம் உமாதேவி

(கரம்பன் மேற்கு)

கரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செம்மணி வீதியை வசிப்பிடமாகவும், கொண்ட இராசநாயகம் உமாதேவி 8-10-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொலீஸ் இன்ஸ்பெக்டர் இராஜநாயகத்தின் அன்பு மனைவியும், சாம்பவி, சிவபாலன், ஆனந்தபாலன், புனிதவதி, சிறிபாலன், பவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வராஜா, சாந்தலக்ஷ்மி (சாந்தி) அருணா, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, சிறிக்காந்தா, செல்வராணி ஆகியோரின் மாமியும், கார்த்திகேயன், சேந்தன், நிமலன், பிரதாயினி, மாதங்கி, கீர்த்தனா, கஸ்தூரி, ஹரிராம் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (9-10-98) காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
புனிதவதி
(மகள்)

இல: 218, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர். (59735)

ஐகலாயம் செட்டியார் முத்துக்குமாரசாமி

யாழ். பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும்வதிவிடமாகவும் கொண்ட கைலாயம் செட்டியார் முத்துக்குமாரசாமி நேற்று 08—10 - 98 இவ்வுலகை நீத்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு. சிவலோகநாதன்
(மகன்)

443, மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம். (59771)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக. 9
முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய, குடாநாட்டில் கிடைக்காத பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நூல்களையும் —

இந்திய இசைக் கலைஞர்களால் பாடப்பெற்ற "பாப்பாப் பாட்டு" ஒலி நாடா வரிசையையும் —

இலத்திரன் ஆர்வமுடையோர் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நல்லை ஆதீனத்தில் பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற பாலர் கல்வி தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்ட பாலர் நலன் விரும்பி ஒருவர் இந்நூல்களை இங்கு கொண்டு வந்துள்ளார்.

இந்திய எழுத்தாளர்களான ஜான் முருகசெல்வம், திருமதி ஜான்ஸி முருகசெல்வம் ஆகியோரால் எழுதப்பட்ட நூல்கள் விசேடமாக வெவ்வேறு வகைகளில் ஈடுபாடுற்ற பாலர்களுக்கு கல்வியூட்டுவது குறித்தவையாகும்.

இந்த நூல்களை சுற்று முறையில் பாலர் கல்வி ஆசிரியர்கள் பலரும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற பெருநோக்கோடு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ)

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
மம்மூட்டி - அஞ்சு விஷ்ணுவரதன் நடித்த
சத்திரிய வம்சம்
(U/A)
நெஞ்சுஉருக்கும்காட்சிகள்
காட்சி: 10-30, 2-30
(59749)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
அரவிந்தசாமி மதுபாலா ஸ்ரீவித்தியா ஜனகராஜ் • நாஸர் நடித்த
ரோஜா
இனிய பாடல்கள் நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய தோரம்)
(சி/5020)

காணவில்லை

யமகா 90 CC
சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் 126 - 7442 இலக்கமுடையது; யாழ். கோவில் வீதி, 3 ஆம் இலக்க வீட்டின் முன்நின்ற போது காணாமற்போய் விட்டது; தகவல் தெரிந்தவர்கள் அறிவிக்க வேண்டிய முகவரி:-

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.
(59758)

புலமைப் பரிசில் பரீட்சை - 1999

7 ஆவது
பயிற்சிப் பரீட்சை
11 - 09- 98 ஞாயிறு நடைபெறும்.
BOND
யாழ். நகர். (59764)

மரண அறிவித்தல்கள்

யேக்கப் பெனடிற்

நவாலி தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கச்சாய், கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட யேக்கப் பெனடிற் அவர்கள் 29-9-98 அன்று விமான விபத்தில் அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் ஜெயசோதி அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற யேக்கப் எலிசபெத்தின் அன்பு மகனும் திரு. திருமதி சந்தியாப்பிள்ளையின் அன்பு மருமகனும், சங்கீதா, மேரிகொன்சலா, அன்ரனி, கொன்ஸ்ரன், சுரேகா ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

இவரின் ஆன்ம இளைப்பாறுதிக்காக கச்சாய் புனித பேதுருவானவர் ஆலயத்தில் 9-10-98 இன்று காலை 7 மணிக்கு திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு திருப்பலிப்பூசையில் பங்கு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
பெ. ஜெயசோதி
(மனைவி)
பிள்ளைகள்

(சி/5127)

அருளம்பலம் நவரட்ணசிங்கம்

(சின்னராசா)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், காளுவன், சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் — நவரட்ணசிங்கம் 06 - 10 - 1998 (செவ்வாய்க் கிழமை) கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் ராஜலக்குமியின் அன்புக் கணவரும், வசந்தி (சுழிபுரம்), சித்திரா (ஆஸ்திரேலியா), செல்வமலர் (ஆஸ்திரேலியா), ஆசித்தன் (ஜேர்மனி), காண்டீபன் (சுவிஸ்), சாந்தி (கொழும்பு), ஜனார்த்தனன் (யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயில்வாகனம், பாலசுப்பிரமணியம், பஞ்சலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ஜெயராஜ் (பங்காளர் ராஜ்வரன் — அன் கோ, யாழ்ப்பாணம்), மோகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோபனா, தோமினா, பவித்தன், ஜஸ்ஸிவி, கேஸவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10-10-98) சனிக்கிழமை காலை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ந. ராஜலக்குமி
காளுவன், சுழிபுரம். (யாழ்ப்பாணம்) (59763)

சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(பிரபல பாடகர், நல்லூர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (8-10-98) நேற்று நல்லூரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி (கொழும்பு), தர்மகுலசிங்கம் (ஓய்வுபெற்ற உதவியோகத்தர், விற்பனைத் திணைக்களம்), கமலேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும், கணேசன் (ஓய்வு பெற்ற உதவித் தபாலதிபர்), கௌரிநாயகி, ஆதிமூர்த்தி (டோகா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பரமேஸ்வரன் (சுவிஸ்), சிவரூபினி, குகரூபன், பவதாரணி, கிருஷ்ணா, நிஷாந்தினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று 8-10-98 பிற்பகல் 4.30 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தர்மகுலசிங்கம்
(மகன்)

414/5, கோயில் வீதி,
நல்லூர். (59765)

சிவகுரு விஸ்வநாதீஸ்வரர்

வேலணை மேற்கு வண்ணாம்புலத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பில் வசித்தவருமாகிய சிவகுரு விஸ்வநாதீஸ்வரர் 07, 10, 98 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவகுரு பொன்னம்மாவின் அன்பு மகனும், மல்லிகாதேவியின் அன்புக்கணவரும், சிவகுமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (ஜேர்மனி), ரவிக்குமார் (காந்தி மோட்டோர்ஸ் யாழ்ப்பாணம்), மலர்விழி (சுவிஸ்), கயல்விழி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், வாசகி (பிரான்ஸ்), திருவேணி (ஜேர்மனி), கலை அமுதா (மட்டுவில்), செல்வம் (சுவிஸ்), மனோகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவேதிகா, சுனியா, சுஜிர்தா, ரக்ஷா, சாரங்கா, சுலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், கதிரவேலுவின் அருமைச் சகோதரனும், இந்திராவதி, மகாலஷ்மி, அரசரத்தினம், கலைச்செல்வி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08, 10, 98 அன்று நடைபெற்று, பூதவுடல் கொழும்பில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இன்று 09, 10, 98 அன்னாரின் சாவகச்சேரி இல்ல இல்லத்தில் துக்க நிகழ்வுகள் நடைபெறும்.

தகவல்:
பே. நடேசபிள்ளை, "நாகபவனம்", மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
வி. ரவிக்குமார் (மகன்)
(59739)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாதுளம் பழ முத்து சிறுமிக்கு எமனானது

நெல்லியடி, ஒக். 9

சுவாசக்குழாயில் மாதுளம்பழ முத்து சிக்கிய தால் சிறுமி ஒருத்தி மூச்சுத் திணறி பரிதாபகரமாக மரணமானார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணி யளவில் வடமராட்சிப் பகுதியிலுள்ள வதிரியில் இடம் பெற்றுள்ளது.

பொலிகண்டியிலிருந்து இடம் பெயர்ந்து வதிரி யில் வசித்து வந்த மகேந்திரராசா மணிராதை (வயது மூன்றரை) என்னும் சிறுமியே மரணமான வராவார்.

முதலில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு பின்னர் அங்கிருந்து அவசர சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வண்டியில் யாழ்போதனா மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்படுகையில் இடையில் வல்லை வெளிப் பகுதியில் சிறுமி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-109)

தணிக்கையை நீக்க கோரி நாடளாவிய போராட்டம்

கொழும்பு, ஒக். 9

போர்ச்செய்திகள் தொடர்பான தணிக்கையை அரசு உடனடியாக நீக்க வேண்டுமெனக்கோரி நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்துவது என ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

ஐயாயிரத்து எழுநூறு கோடி ரூபாவை ஒதுக்கி நடத்திக் கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பான உண்மைச் செய்திகளை மக்கள் அறிந்து கொள்ள முடியாத வகையில் அரசாங்கம் செய்த தணிக்கையைத் தொடர்ந்து அமுல்படுத்திக் கொண்டிருக்கிறது. இது ஜனநாயக விரோத நடவடிக்கையாகும்.

இந்த செய்தித் தணிக்கையை உடனடியாக நீக்கக் கோரி நாடு பூராவும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் ஏற்பட்ட கிளிநொச்சித் தோல்வி தொடர்பாக ஆராய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு வொன்றை அமைக்குமாறு நாடாளுமன்றத்தைக் கோர

ஐ. தே. க. அறிவிப்பு

வும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ. தே. க. நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்த சந்தர்ப்பத்தில் அரச தரப்பினர் எதேச்சாதிகாரமான போக்கில் நிறைவேற்றிய குற்றவியல் அவதூறுச்சட்ட மூலத்தை திருத்த வேண்டுமென பத்திரிகை ஆசிரியர்களின் அமைப்பு எடுத்துள்ள முடிவுக்கமைய அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்றை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)

மொறட்டுவ பல்கலைக்கழக டிப்ளோமா பரீட்சைக்கு தோற்றுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 9

மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமாப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி பெற்றோரின் முதல் தொகுதியினரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தெரிவாகியோர் யாழ். விண்ணப்பதாரிகளின் விவரங்கள் வருமாறு:-

செல்வி பி. வாசுகி (கொக்குவில்), எஸ். ஜெயசங்கர் (யாழ்ப்பாணம்), கே. கமலவண்ணன் (வட்டுக்கோட்டை), எம். ஆதவன் (வட்டுக்கோட்டை), எம். துஷ்யந்தன் (தெல்லிப்பழை), எஸ். மதிகரன் (கரவெட்டி), என். சந்திரன் (யாழ்ப்பாணம்), எஸ். பிரணவரூபன் (கோப்பாய்).

இப்பரீட்சை இம்மாதம் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. (ஜ-5)

ரதோற்சவ சிறப்பு நூல் வெளியீடு

கொழும்புத்துறை, ஒக். 9

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீவல்லிபுர நாதர் தேவஸ்தான ரதோற்சவ சிறப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த 30 ஆம் திகதி புதன்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. (ஜ-30)

வீட்டில் திருட முயன்றோர் வயோதிபரைத் தாக்கினர்

நெல்லியடியில் சம்பவம்

நெல்லியடி, ஒக். 9

இரவு ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த சமயம் வீட்டினுள் புகுந்து திருட முயன்ற திருடர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்ட வயோதிபர் ஒருவர் திருடர்களினால் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11-30 மணியளவில் நெல்லியடி வடக்கு ஆலங்கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வீட்டிலுள்ளோர் உறங்கிய சமயம் கதவு பிரித்து உட்புகுந்த திருடர்கள் அங்கு அலுமாரியைத் திறக்கும் போது, சத்தம் கேட்டு விழித்தெழுந்த வயோதிபர் திருட முயன்ற ஒருவரின் காலைப் பிடித்த சமயம் அருகில் நின்ற மற்றொருவர் வயோதிபரைக் கொட்டனினால் தாக்கியுள்ளான்.

வைரமுத்து நல்லராசா (வயது 60) என்ற வயோதிபரே தாக்குதலுக்கு இலக்காகி நாரி எலும்பு முறிந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஜ-109)

விவாஹ சோபனப் பாடல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 9

'விவாஹ சோபனப்பாடல்கள்' வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் பேராசிரியர், கலாநிதி பு. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் நிறப்புரையை கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயரும், வெளியீட்டுரையை ந. வீரமணி ஐயரும், ஆய்வுரையை சுவாமி நாத ராஜேந்திரக் குருக்கள் நிகழ்த்துவார்கள்.

பாடசாலைக்கு புதிய கட்டடம்

நீர்வேலி, ஒக். 9

ஆவரங்கால் நடராச ராமலிங்க வித்தியாசாலைக்கு சுமார் 2 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து கட்டப்படும் இந்தக் கட்டடம் வித்தியாசாலையின் நூல் நிலையமாகப் பாவிக்கப்படவுள்ளது. (ஜ-110)

பரிசளிப்பு விழா

வடமராட்சி, ஒக். 9

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை பரிசளிப்பு விழாவும், பெற்றோர் தினவிழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிபர் த. தவேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வி. குணானந்தம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலக நிதிப் பிரிவைச் சேர்ந்த பி. இளையதம்பி, தொலைக்கல்வி நிறுவனத்தின் வடமராட்சிப் பிரதேச இணைப்பாளர் க. தர்மசிறிராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (ஜ-173)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயமுன்றலில் நடத்தப்பட்ட

வராத்துப்பளை

ஸ்ரீ ஞான வைரவர் ஆலய சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு இல - 389
2 ஆம் பரிசு இல - 2646
3 ஆம் பரிசு இல - 921

ஆறுதல் பரிசு இலக்கங்கள்

1) 1734 2) 2551
3) 1033 4) 2979 5) 2684

பரிசுகளை 30-10-98-க்குமுன் பெற்றுக் கொள்ளவும்

தலைவர்
ஆலய பரிபாலனசபை

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
ராஜாஸ் ரெயிலறிங்மாட்,
பருத்தித்துறை.

(59756)

நல்லூர்

ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலன சபை

உங்களுக்கு

ஏழரைச் சனியால் கஷ்டமா?
அட்டமத்து சனியால் பாதிப்பா?
வக்கிரச்சனியால் மீண்டும் இடர்பாடா
சனி திசையால் துயரமா?
சனி புத்தியால் சங்கடமா?
சனி பாவக்கிரகமாகி மற்ற
பாவக்கிரகங்களுடன் சேர்ந்து துன்பமா?

இவற்றில் இருந்து மீள
விதியை மதியால் குறைத்து
முக்கியமாக பிராயச்சித்தம் செய்து
சனிபகவானைத்தினமும் அல்லது சனிக்கிழமைகளில்
துதிக்க, வணங்க, தரிசிக்க
விநாயகர், நவக்கிரக, சூரிய வணக்கங்களுடனும்
கோளாறு பதிகத்துடனும்

சனீஸ்வர பகவான் பாடல்கள்

விற்பனையாகிறது

கிடைக்கும் இடங்கள்:
ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில்
யாழ்ப்பாணம்
சட்டநாதர் சிவன் கோயில்
நல்லூர்

சட்டநாதர் சிவன் தேவஸ்தானம்
நல்லூர்.

(59746)

வாழ்த்துகின்றோம்

சைவமும், தமிழும் தழைத்தோங்கத் தொண்டாற்றும்
துர்க்கா துரந்தரி
செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களுக்கு
கலாநிதிப் பட்டம்
வழங்கிக் கௌரவித்தமையையிட்டு வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பா. அ. சங்கம்.
யா/மல்லாகம், கனிஷ்ட வித்தியாலயம்.
(59755)

மலிவு விற்பனை

தெரிவுக்கு முந்துங்கள்

தீபாவளித் திருநாளை முன்னிட்டு 06-10-98 முதல் 19-10-98 வரை

எமது ஸ்தாபனத்தில் மலிவு விற்பனை நடைபெறுமென்பதை அன்பான வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

ஜ. எஸ். லிங்கநாதன் அன் கோ

இல. 13,14, பரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(59707)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இலக்கம் 6, சந்தனமாதா கோயில் ஒழுங்கை, சண்டுக் குளியில் இரண்டு பரப்பு காணியுடனான புதிய வீடு உடன் விற்பனைக்குண்டு; தொடர்பு: S. சந்திரகுமாரன், 73/34C சரணாலய வீதி, தெகிவளை, தொலை பேசி 074-211715.
(சி/5028)

புடைவைக் கடைப் பாவனைக்குரிய அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு; வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்:- இல. 55, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (59719)

வீடு விற்பனைக்கு

ஆவரங்கால் சிவன் ஒழுங்கையில் வசதியான வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு; வாங்க விரும்புவோர் நேரில் தொடர்பு: திருமதி ரூ. மீனலோசனி (தேவி), சிவன் ஒழுங்கை, ஆவரங்கால்.
(59718)

காணி விற்பனைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் வண்ணை வடமேற்கு முருகமூர்த்தி வீதியில் குடியிருப்புக்கேற்ற நன்றாகப் பராமரிக்கப்பட்ட நல்ல வருவாயுள்ள நல்நீர்க் கிணற்றுடன் கூடிய தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு; தொடர்புகளுக்கு: பிறேம் நகை மாடம், கூழாவடி, ஆனைக் கோட்டை. (59737)

தவறிவிட்டது

கந்தையா நடராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல: 300870074 V) மாதகலுக்கும், வல்லிபுரக் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் இல: 8, இராமுப்பிள்ளை வீதி, கொக்குவில் மேற்கு என்ற முகவரியில் சேர்த்து உதவவும்.
(59738)

மாலிசந்தி பருத்தித்துறை பிரதான வீதியில் சைக்கிள் ஒன்று தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் மாலிசந்திப் பிள்ளையார் கோவில் குருக்கள் நடராசா அல்லது அல்வாய் மிழக்கு சுப்பர் வளவு கார்த்திகாரதி கே. தங்கத்துரையிடம் ஒப்படைக்கவும்; சன்மானம் வழங்கப்படும்
(5123)

காணவில்லை

சிறுபுநிற N.S.A.K ஆகிய குறியிடப்பட்ட இரண்டு பசுமாடுகள் கடந்த சனிக்கிழமை முதல் காணவில்லை; இவற்றினைக் கண்டவர்கள் சாவகச்சேரி சந்தை உப்புறம், சோதி தேநீர்ச் சாலையில் தொடர்பு கொள்ளவும்; சன்மானம் வழங்கப்படும்.
(C/5119)

இலகு திருமண சேவை

29 வயது உத்தரட்டாதி ஜேர்மனி மணமகனுக்கு மணப்பெண் தேவை. ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸில் உள்ளவர்களும் இங்கிருந்து அனுப்பக் கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம்; தொடர்பு: ஞானிரு காலை தரைவிமலா, 958/8, K. K. S. வீதி, யாழ். நாச்சிமார் கோவிலடி.
(59694)

திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் வசதியர், கணக்காளர், பொருளியலாளர் மணமக்கள் உண்டு; எங்களிடம் பழைய தொடர்புள்ளவர்களும் புகைப்படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்; துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(59742)

கடை விற்பனைக்கு

சுன்னாகம் பொலிஸ்நிலைய வீதியில் ஜெற்மோட்டோ எதிரில் அண்மையில் பல வருடகாலமாக மிகமுன்னேற்ற காரணமாக இயங்கி வந்த பேக்கறியும் அதனுடன் இணைந்துள்ள இரு கடைகளும் விற்பனைக்குண்டு; ஒரு கடையை மட்டும் வாங்க விரும்புவோரும் பரிசீலிக்கலாம். தொடர்பு: மா. தேவராசா, 5, மயிலணி வீதி, சுன்னாகம்.
(59698)

அறை வசதி

சிறிய குடும்பமுள்ள வீடொன்றில் அரச / தனியார்துறை தொழில்புரியும் பெண்கள் / பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியர் ஒருவர் இருவருக்கு அறை, உணவு வசதி வழங்கப்படும். இல. 51, வைமன் வீதி, நல்லூர்.
(59732)

வகுப்புகள்

புவியியல் A/L, G.A.Q Part II, நில அளவை என்பன கற்பிக்கப்படும்; ஆசிரியர் K. A. ஞானி, B. A. (Hons) இல: 49, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(59712)

பரி யோவான் கல்லூரி

மலைவேம்பங் கன்றுகள்

(மஹோகனி)

விற்பனைக்கு

நன்கு வளர்ச்சியடைந்த நடுகைக்குகந்த வளர்ந்த கன்றுகள் உடன் விற்பனைக்குள்ளன. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தலைவர்,
விவசாய விஞ்ஞானக் கழகம்
பரி. யோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(சி/5114)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

தெல்லிப்பழை – கலை இலக்கியக்கள இணைச் செயலாளர்கள்

கலைப்பேரரசு

ஏ. ரி. பொன்னுத்துரை

அவர்கள்

நாடகக்கலை அறிஞர்

ஆளுநர் விருது பெற்றமைக்கும்

திருமதி

கோகிலா மகேந்திரன்

அவர்கள்

வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் சிறுகதைத் தொகுதி மூலம்

சாகித்திய மண்டலப்பரிசு பெற்றமைக்கும்

இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

தெல்லிப்பழை
கலை இலக்கியக் கழகத்தினர்

(59743)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 22 – 07 – 1916

உதிர்வு 09 – 09 – 1998

அமரர் முத்துத்தம்பி பொன்னுத்துரை

அன்பதே பூண்ட முகமும்
அருளதே மிக்க பார்வைப்
பண்பதே கொண்ட அகமும்
பணியதே பலமுமான
அன்புசேர் எங்கள் ஐயா!
ஆதரித்திரே நம்மை நன்றாய்
உம்பதம் போற்றி நாளும்
உம் நினைவேற்றுகின்றோம்.

எங்களை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
(59701)

பகீரதனே!

சென். ஜோன் அம்புலன்ஸ் அத்தியட்சகரே
(அண்ணா பிரிவு - இணுவில்)

பகீரதனே ஓடிவா; பறந்து வா!
வெளிநாடு போக 'லயன் ஏயரில்' பறந்தாயா?
நீச்சல் உன்னலை, நீந்திவா, சுழி ஓடிவா
ஒரு தசாப்தமாக தொடர் கடமையாற்றினாயே?
துர்க்கை அம்மன் கடமையா இறுதி?
வல்விபுர கடமையில் நீ இல்லையே! இறக்கை
ஒடிந்த வெண்பறவைகளானோம்!
உன் அண்ணன் கிருபாகரனையும் கூட்டி வா
அண்ணியும் பார்த்திருக்கின்றார்; பட
அங்கத்தவர் விஷ்ணுதேவனின் தாயார்
மனோரஞ்சிதம், அண்ணன் செந்தில்வேல்
மாமன் இரகுநாதன் அவர்களையும்
இரணைதீவுக் கடலில் கண்டாயா?
சந்நிதிக் கோயில் காவடி எடுத்தாயே?
கதிர்காமத்தில் இருந்து சந்நிதி முருகனிடம்
வேல் வந்த வேளையில் சிரமதானம் செய்தாயே?
சென். ஜோன் அம்புலன்ஸ் குடும்பத்தினர் கடல்
நீளம் பார்த்திருக்கின்றனர்; உன்னோடு
நால்வரையும், சேர் என்று சொண்டு
விரைந்து வா.

க. அருந்தவராஜா
உதவி மாவட்ட ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள்.
(59744)

கண்ணீர் அஞ்சலி

தம்பையா தியாகராஜா

தாவடி மேற்கு கொக்குவிலைச் சேர்ந்த தம்பையா தியாகராஜா அவர்கள் 29-09-98 அன்று காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கா. வைத்தீஸ்வரன்

சோமசுந்தரம் வீதி,
தாவடி மேற்கு,
கொக்குவில்.
(59736)

கண்ணீர் அஞ்சலி

29 – 9 – 98 அன்று விமான விபத்தில் அகால மரணமடைந்த யாழ். பல்கலைக்கழக மாணவிகள்

திரேசிற்றா அருள்மணி கூஞ்ஞு
இமாகுலேற்றா பெர்னாண்டோ

ஆகியோருக்கு யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலி.

இவர்களின் ஆன்மசாந்திக்காக 9 – 10 – 98 வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணிக்கு பல்கலைக்கழக நல்லாயன் ஆலயத்தில் இரங்கல் நிகழ்ச்சி ஒப்புக்கொடுக்கப்படும்.

கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(59740)

நினைவு கூருகின்றோம்

தோற்றம் 02 – 09 – 1956

மறைவு 12 – 10 – 1995

அமரர்

சின்னவி திருச்செல்வம்

திதி: 09 – 10 – 98 வெள்ளிக்கிழமை

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
அன்பின் உருவான தங்களின்
புன்வதனம் இன்றும் இனிஎன்றும்
எம்மனதை விட்டு மறையாது!

மனைவி, மாமி,
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

வீரபத்திரர் கோயில் தெற்கு,
உடுப்பிட்டி.
(சி/5121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு சேதக் கொடுப்பனவுக்கான காசோலைகள் அனுப்பப்பட்டன

மூன்று கட்டங்களாகக் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 9

கடந்த கால வன் செயல்கள் காரணமாக முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்காக வழங்கப்பட உள்ள 25 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகையில் முதற் கட்டமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகங்களால் வழங்கப்பட்ட விவரங்களுக்கமைவாகவே இந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தில் முதலில் 36 ஆயிரம் பேருக்கு இழப்பீடுகள் வழங்கப்படும்.

முதற் கட்டமாக 10 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் கட்டமாக 10 ஆயிரம் ரூபாவும் இறுதியாக 5 ஆயிரம் ரூபாவுமாக இந்த 25 ஆயிரம் ரூபா இழப்பீட்டுத் தொகை மூன்று கட்டங்களாக வழங்கப்படும்.

ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களில் முதலில் இப் பணம் வழங்கப்படும். இதற்கான காசோலைகள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலகங்களால் இந்தக் காசோலைகள் வங்கியில் வைப்பில் இடப்பட வேண்டும்; அல்லது அவை உடனடியாக அரசாங்க அதிபருக்கு திருப்பி அனுப்பப்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

பணம் வங்கியிலிடப்பட்ட சில நாள்களின் பின்னர் அப் பகுதி மக்கள் அந்தந்த வங்கிக் கிளைகளில் சென்று தமக்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

விடுவிக்கப்பட்ட இளைஞர் செயலகப் பராமரிப்பில்

யாழ்ப்பாணம், ஒக். 9

இந்தியாவிலிருந்து படகு மூலம் இலங்கைக்கு திரும்பும் போது ஊர்காவற்றுறை கடலில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸார் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நான்கு இளைஞர்கள் தற்பொழுது யாழ். செயலகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மல்லாவி, மன்னார் பகுதிகளைச்சேர்ந்த இந்த நான்கு இளைஞர்களும் கப்பல்மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

எஸ். கிருபாகரன் (மல்லாவி), கோ. மதனராஜ் (மன்னார்), ஜெ. கண்ணன் (மன்னார்), ரி. சசிகுமார் (மன்னார்) ஆகிய நான்கு இளைஞர்களுமே தற்பொழுது யாழ். செயலக பராமரிப்பில் இருப்பவர்களாவர்.

இவர்கள் 1997 டிசம்பரில் கடலில் வைத்து கைது செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

மீன் வியாபாரி கைது குறித்து ஆணைக்குழுவிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஒக். 9

கொழும்புத்துறையில் மீன் வியாபாரி ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சகாயநாதன் புனிதராஜா என்பவர் கொழும்புத்துறையிலிருந்து புங்குடுதீவுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று மீன் எடுத்து வந்து வியாபாரம் செய்பவர்.

கடந்த 5 ஆம் திகதி திடீரென இவரது இல்லத்துக்கு சென்ற படையினர் இவரை அழைத்துச் சென்றதுடன் இவரது மோட்டார் சைக்கிளையும் கொண்டு சென்றனர்.

இவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக இவரது மனைவியிடம் பற்றுச் சீட்டு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இக்கைது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். செயலகத்தில் இவரது மனைவி புஷ்பதேவி தர்சினி என்பவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

வடமராட்சி கிழக்கில்

பாடசாலை மாணவருக்கு பற்சிகிச்சைக்கு ஏற்பாடு

வடமராட்சி கிழக்குப்பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பற்சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு, சுகாதார திணைக்களவைத்திய அதிகாரிகள், பாடசாலை பற்சிகிச்சையாளர்கள் இணைந்து அம்பன் மருத்துவ மனையில் இச்சிகிச்சை முகாமை நடத்தவுள்ளனர்.

இதற்கான முன்னேற்பாடாக அம்பன் மத்திய மருந்தக வைத்திய அதிகாரி குழுவினர் பாடசாலைகள் தோறும் சென்று பற்சிகிச்சை பெறவேண்டிய மாணவர்களை இனங்கண்டு வருகின்றனர்.

நாகர் கோயில் மகாவித்தியாலயம், அம்பன் அ.மி.த.க பாடசாலை என்பவற்றில் எதிர்வரும் 16 ஆம் திகதி இதி தெரிவு இடம் பெறவுள்ளது. (ஐ - 36 - ரீ)

வாசகர் திருமுகம்

தீவக மக்களின் போக்குவரத்து

தீவகத்தில் விவசாயம் உட்பட பல தொழில்களில் ஈடுபடுகின்ற மக்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் தங்களுடைய பல தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு யாழ் நகரினையே நாடுகின்றார்கள்.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ் நகரினை அடைவதற்கு 15 மைல் தூரத்தைக் கடக்க வேண்டியுள்ளது. இந்த இலக்கினை அடைவதற்குப் போக்குவரத்துச் சபையினுடைய பேருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. இப் பேருந்துகள் குறிப்பிட்ட நேரத்திற்கு இலக்கை அடைய உதவி செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தெருப் போக்குவரத்தின் முக்கிய பிரச்சினை எனப்படுவது மக்கள் போக்குவரத்துக்காக நீண்ட நேரம் காத்திருத்தலாகும். இந்த முக்கிய பிரச்சினையையே ஊர்காவற்றுறைப் பிரதேச மக்கள் அனுபவிக்கிறார்கள்.

இதற்கான காரணத்தைக் கண்டறிய முற்படுவோமாயின் முதலாவதாகப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் பேருந்துகளில் காணப்படுகின்ற குறைபாடுகளும், இரண்டாவதாகக் குறிப்பிட்ட நேரத்தில் பேருந்துகள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தாமையுமே ஆகும்.

இதனால் இப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் தங்கள் அன்றாடக் கடமையினை நிவர்த்தி செய்ய முடியாமை, தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்லும் மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குச் சமூகமளிக்க முடியாமை போன்ற பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ் நகருக்குப் பயணிகளை இடம் நகர்த்தும் பேருந்துகளினைத் தரமானதைப் பயன்படுத்தல், குறிப்பிட்ட நேரத்திற்குக் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு ஏற்ற வழிவகை செய்தல் என்பவற்றின் மூலம் மேலுள்ள குறைபாடுகளைக் கூடிய அளவு நிவர்த்தி செய்ய முடியும் என்பது திண்ணம்.

இது விடயத்தில் போக்குவரத்துச் சபையினரின் பங்களிப்பு அவசியமாகும். தீவக மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென வேண்டி நிற்கிறோம்.

புளியங்கூடல். செந்தமிழ்.

நுகர்வோர் பாதுகாப்புக் குறித்து விழிப்புணர்வு தேவை

நுகர்வோர் பாதுகாப்புப் பற்றி பல செய்திகள் வெளிவருகின்றன. இதற்கான சட்டமும் இருக்கின்றது. ஆனால் இந்தியாவில் செயற்படும் நுகர்வோர் பாதுகாப்பு நடைமுறைகள் இங்கே பலனளிக்காமல் போனதற்கு பல காரணங்கள் உள.

ஒன்று நுகர்வோர் கடமைகள் பற்றிய விழிப்புணர்வு, இரண்டாவது இவற்றினை செயற்படுத்தும் திணைக்களங்களின் அக்கறையின்மை, மூன்றாவது ஊடகங்கள் மூலம் மக்களுக்கு கிடைக்கக்கூடிய செயற்பாடுகள் பற்றிய தகவலின்மை. இங்கே இவை செயற்படுத்தப்பட வேண்டிய நிலை சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு. அதனை அவர்கள் நுகர்வோருக்கு பத்திரிகை மூலம் வெளிப்படுத்த வேண்டும்.

இந்தியாவிலும் பிற நாடுகளிலும் நுகர்வோர் நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்தி வெற்றியும் பெற்றுள்ளனர். இங்கே உள்ள வர்த்தகத் திணைக்களம் இதற்கு உதவவேண்டும். இந்தியாவில் நுகர்வோர் தான் நுகர்வோர் சங்கங்கள் மூலம் வழக்குகளைப் பதிவு செய்கிறார்கள். வளர்ந்து வரும் நாடுகளில் நுகர்வோர் கொடுக்கும் முறைப்பாடுகளை வர்த்தக திணைக்களமே முன்னின்று நுகர்வோருக்கான கடமைகளையும் செய்து சம்பந்தப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் மேல் தண்டனை வழங்கவும் வழி செய்கின்றது. இதனை இங்குள்ள சட்டவல்லுனர்கள் ஆராய்ந்து பாவனையாளர்களுக்கு உதவி செய்யக் கூடிய வகையில் இருந்தால் அது பெரிதும் நன்மை பயக்கும்.

சம்பந்தப்பட்ட யாழ் மாவட்ட திணைக்கள அதிகாரிகள் அல்லது சங்கங்கள் தங்கள் விழிப்புணர்வையும் பிரசாரத்தையும் மேற்கொள்வார்களா?

செ. செல்வரஞ்சனா.

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

கலையில் மிளிரும் குழந்தைகளை இனங்கண்டு வளர்க்க வேண்டும்

வைர விழாவில் உரை

வலிகாமம் தெற்கு, ஒக். 9

இசை, நடனம், சித்திரம், சிற்பம், ஓவியம் போன்ற பல்வேறு கலைத்துறைகளிலும் சிறந்த குழந்தைகள் இந்த நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களை கல்வி உலக அதிகாரிகளும், கல்வி உலகமும் இனங்கண்டு வளர்க்க வேண்டும். கலைத்துறையில் திறமையுள்ள மாணவர்கள் இனங்காணப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். வெறும் அறிவுத்துறையில் மட்டும் பரீட்சைகளில் அதிஉயர் சித்திகளைப் பெறுவதைக் கண்டு மகிழ்வதுடன் நிற்கக் கூடாது.

சங்கீத பூஷணம், அளவெட்டி வி.கே. நடராஜாவின் வைரவிழாவில் பாராட்டுரை வழங்கிய மல்லாகம் மாவட்ட நீதிவானும் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக நீதிவானுமாகிய மு. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலயத்தில் பிரம்மஸ்ரீ இ. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் விழா நடைபெற்றது.

வி. கே. நடராஜாவின் மாணவ-மாணவிகள், அன்பர்கள், நண்பர்களால் நடராஜா தம்பதிகள் வீட்டில் இருந்து விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அருட்கவி சி. வினாசித் தம்பி விழா நாயகருக்கு பொன்னாடை போர்த்தி, 'கேளிசைவாரி' என பட்டமளித்து கௌரவித்தார்.

யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு தனது பாராட்டுரையில் மேலும் கூறியதாவது:-

இசை மேதைகள் எனப் பலர் வாழ்கிறார்கள். எல்லோரும் பாடுகிறார்கள்தான் ஆனால் பாடுகிறவர்கள் எல்லோருமே பிரகாசிப்பதில்லை. உயர்நிலை அடைவதில்லை. திரு. நடராசா குரல் வளம், சொல்வளம், பண் ஆகிய துறைகளில் தண்டாயுதபாணி தேசிகருக்கு ஒப்பானவர். இசையினை பக்தியுடன் கலந்து நெக்குருகப்பாடுபவர். அதனால் அவர் உயர்ந்த நிலை பெற்றுள்ளார்.

தண்ணீர்ப் பாத்திகட்டி, வாழைக்குலை வெட்டி, வருமானம் தேடி இசைக்கலை வளர்த்த பூமி அளவெட்டி. குருபக்தியுடன் சேர்ந்த இசை ஞானம் நிறைந்த ஊர் அது.

சரஸ்வதி கடாட்சம்பெற்ற நடராஜா போன்ற இசை மேதைகளால்தான் எந்தனையோ தெய்வசக்திகள் எம்மைச் சூழ்ந்துள்ள இன்றைய காலத்திலும் தமிழ், கலை, இசை ஆகியன இன்னமும் மறைந்து விடாமல் நிலைத்துள்ளன. இவ்வாறு அவர் தனது பாராட்டுரையில் குறிப்பிட்டார்.

இசைக் கலைஞர்கள் தம் குருவைப்பின்பற்றி இசையை வளர்க்க வேண்டும் — என்றார்.

உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் தனது பாராட்டுரையில்— கூறியதாவது:-

இசையுலகில் இன்று பழம் பெரும் இசைக்கருவிகள் மறைந்து விட்டன. வயலின் வாத்தியம் வந்த பின்னர் 'சாரங்கி' என்ற பழைய இசைக் கருவி மறக்கப்பட்டு விட்டது. மறக்கப்பட்ட இசைக் கருவிகள் மீண்டும் பாவிக்கப்பட்டு இசைத் துறைக்கு மெருகூட்ட வேண்டும் — என்றார்.

வைரவிழாக் குழுவினரால் திரு. நடராஜாவுக்கு பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கப்பட்டது. பாராட்டுப் பத்திரங்கள் பல வாசித்து வழங்கப்பட்டன.

கல்விக் கோட்ட அதிகாரி களான அ. கமலநாதன் (தெல்லிப்பழை), எஸ். கணேசலிங்கம் (சங்கானை), திருமதி ஆர். இருதயநாதன் (சண்டிலிப்பாய்), வலயம் இரண்டு சங்கீதப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை அ. மு. அருணாசலம் (அதிபர்), மகேந்திரராசா (அதிபர்), நாதஸ்வரவித்துவான் இ. கேதீஸ்வரன் உட்பட பலர் பாராட்டினார்கள். ஏ.பி.வி. நடராசா பதில் உரைவழங்கினார். (ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுப் பரிசோதகர் போட்டிப் பரீட்சை

பயிற்சி வகுப்பு ஆரம்பம்: 11 — 10 — 1998
பிற்பகல் 2 மணி

திரு. K. T. பிரபாகரன் B A; PGDPA
மேலதிக விவரங்களுக்கு:
இயக்குநர்
கோப்பாய் கல்வி நிலையம்
மானிப்பாய் வீதி, கோப்பாய்.
(59734)

விவாஹ சோபனப் பாடல்கள்
வெளியீட்டு விழா

இடம்: நல்லூர் சிவன் கோயில் மண்டபம்.
காலம்: 11 - 10 - 98 ஞாயிறு
பிற்பகல் 2 00 மணி.

தலைவர்: பேராசிரியர், கலாநிதி
ப. கோபாலகிருஷ்ணஐயர்
அமரர், இசைக்கலைமணி, ஸ்ரீமதி
தாக்ஷாயணி சிவானந்தசர்மா
பாடிய வைதீகத் திருமண ஊஞ்சல்,
நலுங்கு நிகழ்ச்சிகளினதும், பாடல்களினதும்
தொகுப்புக்கள் (ஒலி-ஒளி நாடாக்கள்)
"விவாஹ சோபனம்" நூல் — ரூ 50
"விவாஹ சோபனப் பாடல்கள்" —
ஒடியோ - ரூ 150
வீடியோ - ரூ 350

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★
விழாக் குழுவினர்.
"கலையகம்" ஆவரங்கால். (59713)

முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம் 01 — 07 — 1951
மறைவு 19 — 09 — 1997

அமரர்
இளையதம்பி மகேந்திரம்

திதி: 09 — 10 — 1998

அப்பா அப்பா எம் தெய்வமே!
கண்களில் நீர் இங்கு பெருகுதப்பா!
காலம் ஓராண்டானாலும்— எங்கள்
கவலைகள் தான் என்றும் ஆறிடுமோ?
மாலவன் போல் எம்முன் வீற்றிருந்து—எம்மை
மாண்புடன் வளர்த்ததை மறப்போமா?
தோன்றிடும் உங்கள் தோற்றம்—எம்மை
தேம்பியழுதிட வைக்குதப்பா
தேசு வாழ்ந்திடலாமென்றே - என்னை
ஜேர்மனி தானும் அனுப்பிவிட்டே
தேடிட முடியா தேசத்திற்கே—நீங்கள்
ஓடியதேனோ அப்பாவே!
மாண்புறு மனைவி மக்களுடன்
மண்ணில் நீங்கள் வாழ்வதனை
மாற்றான் யாவும் பொறுக்கலையோ
காற்றாய் கலந்த அப்பாவே— எங்கள்
காதில் ஒருமுறை பேசுங்கள்
ஆசைக்கு ஒருமுறை கேட்டிடுவோம்
காலம்காலமாய் உங்கள் நினைவால்
எங்கள் கண்கள் நீரால் நனைகிறதே!

மனைவி, பிள்ளைகள்.
மகன் சபேசன் (ஜேர்மனி).

தம்பசிட்டி,
பருத்தித்துறை. (59496)

விருதுவழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஒக். 9
யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 11 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.
துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.
(இ-3)

மாணவர் பகிஷ்கரிப்பு

அம்பாறை, ஒக் 9
98 இல் நடந்த ஜி. சீ. ஈ. (உயர் தர) பரீட்சை வினாத்தாள்கள் முன்னரே வெளியான விவகாரம்தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.
அடுத்த கட்டமாக ஹர்த்தால் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(இ-14)

நவீன மலசல கூடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9
பிரிட்டனின் நிதியுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய மலசல கூடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.
இதற்கென பிரிட்டன் 10 இலட்சம் ரூபாவினை யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்கியிருந்தது.
யாழ். பல்கலைக்கழக பராமரிப்பு பகுதியினரால் பல்கலைக்கழகத்தில் இருந்த பெண்களுக்கான மலசல கூடம் இந்த நிதி மூலம் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இந்த மலசலகூடம் குழியல் அறை வசதிகளையும் கொண்டது.
யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் யாழ். பல்கலைக்கழக வைத்திய அதிகாரியினால் அந்த மலசல கூடம் திறந்துவைக்கப்பட்டது.
(ஐ-9)

மிதிவெடியில் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 9
கைவிடப்பட்ட இராணுவக் காவலரண் பகுதியில் விறகு பிடுங்கச்சென்ற ஒருவர் அங்கு நடப்பட்டிருந்த பனை மரத்துண்டு ஒன்றை அசைத்து இழுத்தவேளை திடீரென வெடித்த மிதி வெடியினால் படுகாயமடைந்தார்.
நீர்வேலிப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து நீர்வேலி பூதர்மடம் பகுதியில் வசிக்கும் தம்பன் சிவகுரு (வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவார்.
காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.
(இ-139-15)

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
(வ-து)
பதவி வெற்றிடம்

1. பதவி:
கணக்காளர் (நிரந்தரம்)

2. சம்பள அளவுத்திட்டம்:
165/88 — 104/10
3,100 — 4,900
80 X 10 — 100 X 10 (சுற்றறிக்கை 31/97)

3. தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளர் சம்பளத்திட்டம் 11 இல் கணக்குப்பதிவாளர் / கணக்கு அல்லது எண்பார்வை இலிகிதர் பதவியொன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர் / கணக்கு அல்லது எண்பார்வை இலிகிதர் பதவியொன்றில் 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தில் இறுதிநிலைப் பரீட்சையில் சித்தியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத்துறை / எண்பார்வைத்துறையில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப்பதிவாளர் பரீட்சையில் நடுத்தரப் பிரிவில் சித்தியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு எண்பார்வைத்துறையில் மேற்பார்வை நிலை பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணிபாளர் தராதரப்பத்திரப் பரீட்சை (உயர்தரம்) சான்றிதழ் / பொது தகுதி (உயர் தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு எண்பார்வைத் துறையில் மேற்பார்வை நிலை பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

4. வயதெல்லை:-
31 - 10 - 98 ஆம் திகதி 23 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கட்கு வயதெல்லை ஏற்புடையதன்று.

5. ஏனைய விவரங்கள்:-
1) சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 10 காசுக்கிட்டலையையும் தங்களது பெயர், முகவரி எழுதப்பட்ட 9" x 4" அளவிலான முத்திரைக் கடித உறை ஒன்றை 15 - 10 - 98 ஆம் திகதிக்கு முன்னர் 'பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, பிழக்கு, கோப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலமோ அல்லது நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
2) விண்ணப்ப முடிவுதிகதி:- 31 - 10 - 1998
3) தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

- பொது முகாமையாளர்

(சி-5117)

மாபெரும் மலிவு விற்பனை

சகல விதமான ஆடைகளையும் தெரிவுசெய்ய முந்துங்கள்.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு 09 - 10 - 98 முதல் 19 - 10 - 98 வரை எமது ஸ்தாபனத்தில் மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சிவா புடைவையகம்
27, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (59728)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

தலையில் மண்

அடுத்த ஆண்டில் நாட்டின் பாதுகாப்புச் செலவினம் 4,735 கோடி ரூபாவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. வரவு-செலவுத் திட்டத்தில் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வருடத்தில் பாதுகாப்புச் செலவுக்கென முதலில் 4,449 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் கொண்டு வரப்பட்ட குறைநிரப்புப் பிரேரணைகள் மூலம் 6,000 கோடி ரூபாவாக உயர்த்தப்பட்டது.

ஆகையால், அடுத்த ஆண்டின் பாதுகாப்புச் செலவு 7,000 கோடி ரூபாவுக்கு அதிகமாக உயர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அது ஒரு புறமிருக்க, அடுத்த ஆண்டும் அரசாங்கம் போரைத் தொடர்வதற்கு உத்தேசித்துள்ளது என்பது கூடுதல் ஒதுக்கீட்டின் மூலம் புலப்படுத்தப்படுகிறது.

இந்த வருட இறுதிக்குள் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிடும் என்று அரசாங்கத் தரப்பினர் முன்னர் கூறினார்.

எனினும், போர் முனையில் பெரிய அளவில் முன்னேற்றம் காண முடியவில்லை என்பதனை உணர்ந்து, 1999 ஆண்டில் போர் முடிவுக்கு வந்து விடும் என்று ஜனாதிபதி கூட்ட மேடைகளில் அவ்வப்போது அறிவிக்கத் தொடங்கினர்.

அந்தக் கணிப்பின் பிரகாரமும் அடுத்த ஆண்டிலும் போர் தொடரும் என்ற கருத்தே நிலவியது. எனினும் 1999 மார்ச் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் பொருட்டு இந்த வருட இறுதியிலேயே போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய தேவை - நிர்ப்பந்தம் - அரசுக்கு உண்டு என்று அவதானிகள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆனால் தள, கள நிலைமை, அரசியல் சூழ்நிலை எதனையும் கருத்திற் கொள்ளாமல், அடுத்த ஆண்டிலும் போரைத் தொடர்ந்து நடத்துவது என்று அரசு தீர்க்கமாக முடிவு செய்திருப்பதையே பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு பிரதிபலித்துள்ளது.

போரைத் தொடர்வதனையே உள்நோக்கமாகக் கொண்டிருக்கும் அதே வேளை, அரசியல் தீர்வு, தீர்வுப் பொதி, சமாதானப் பேச்சுவார்த்தை என்று காலத்துக்குக்காலம் அரசு கூறிவருவது வெறும் வெற்றுக் கோஷங்களாகவே அமைகின்றன.

உள்நாட்டில் மக்களை-வாக்காளர்களை- திருப்திப் பொருத்தமாகத் திசை திருப்புவதற்காக மட்டும் இந்த வெற்றுக் கோஷங்கள் எழுப்பப்படவில்லை. ஐ.நா. அணி சேரா இயக்கம், சார்க் போன்ற சர்வதேச மாநாடுகளிலும் இவை அரங்கேற்றப்படுகின்றன.

இந்த ஒரு சின்னஞ்சிறு நாட்டின் வருமானத்தில், முப்பது சத வீதத்தைப் போருக்குச் செலவழித்து நாட்டை அழித்துக் குட்டிச் சுவராக்குவதால் ஏற்படும், ஏற்படவுள்ள பாதக நிலையைச் சற்றும் கவனத்திற் கொள்ளாமல் போரைத் தொடர்வது, தலையில் தன் கையால் மண் அள்ளிக் கொட்டுவதே ஆகும்!

சிவனின் வாமபாகம் சேரவேண்டி சக்தி அனுஷ்டித்த கௌரி விரதம்

கடந்த மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இம் மாதம் 20 ஆம் திகதி வரையான 21 நாள்கள் கேதார கௌரி விரத காலமாகும்.

வாழ்வில் இன்ப துன்பங்கள் வருவது இயல்பாகும். இதில் துன்பங்களைப் பொறுத்து, இன்பங்களை அனுபவிக்கின்ற பக்குவம் எமக்கு வரவேண்டும். நாம் இன்பமாக வாழ வேண்டும் என்பதற்காக இறைவன் எம்மீது வைத்த அரும்பெரும் கருணையினால் பல விரதங்களை அருளியுள்ளார். உடல், உள்ளம், வாக்கு என்பவற்றை தூய்மைப்படுத்த ஏற்ற ஒழுக்க சாதனமாக அமைவது இந்த விரதங்களே ஆகும். இவ்வாறான விரதங்களில் ஒன்றுதான் கேதார கௌரி விரதம் ஆகும்.

குடும்பத்தில் நல்லுறவு நிலவி, இல்லறம் நல்லறமாக விளங்கவும், நன்மைகளைப் பெறவும், கன்னியர்க்கு நன்மணப் பேறு கிட்டவும், வறுமை ஒழியவும் வகை செய்வதாக சிவ விரதங்களில் ஒன்றான கேதார கௌரி விரதம் விளங்குகின்றது.

முன்பு ஒரு சமயம் கைலாயத்தில் பார்வதியோடு பரமசிவன் வீற்றிருந்த சமயம் பிருங்கி முனிவர் பரமசிவனை மட்டும் வலம் வந்து வணங்கினார். இதைக் கண்ணுற்ற பார்வதி வியப்புற்று அதற்கான காரணத்தை தன் நாதரிடம் வினாவினார். அவர் பிருங்கி பாக்கியத்தை விரும்புபவன் அல்ல, மோட்சத்தையே விரும்புகிறவன். ஆதலினால் என்னை மாத்திரம் வலம் செய்கிறார் என்றார். உடனே தேவி பிருங்கி முனிவரிடம் இருந்து தனது சக்தி அம்சமான இரதி தம், மாமிசம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டார். இதனால் வலுவிழந்த முனிவர் மீது கருணை கொண்ட சிவன் ஒரு தண்டைக் கொடுத்து உதவினார்.

அப்பொழுதே அவ்விடம் விட்டு நீங்கிப் பூலோகத்தை அடைந்து கௌதம முனிவரின் ஆச்சிரமத்தில் தேவி வீற்றிருக்கலானார். இதை உணர்ந்த கௌதம முனிவர் தேவியினைத் தரிசித்து இங்கு வந்தமைக்கான காரணத்தை வினாவினார். பார்வதி நடந்தவற்றைக் கூறி, தான் சிவனின் வாமபாகத்தில் கலந்து இருக்கும் பொருட்டு ஒரு சிறப்பான விரதத்தினை கூறுமாறு கேட்டார். முனிவரும் சிறப்புப் பொருந்திய கேதார கௌரி விரதத்தைப் பற்றிக் கூறினார். பார்வதியும் கேதாரநாதரை நோக்கி 21 தினங்கள் விரதமிருந்து, காப்புக்கட்டி நாதரை மகிழ்வித்து சிவனின் வாமபாகத்தை அடைந்து சிவமும், சக்தியும் ஒன்றென உணர்த்த அர்த்த நாரீஸ்வரராகக் காட்சியளித்தார்கள்.

பார்வதி தேவியினால் அனுஷ்டித்த இவ் விரதத்தினை அனுஷ்டிப்போர் 21 வருடங்கள், இயலாதவர் 7 வருடங்களாவது அனுஷ்டிக்க வேண்டும். கேதாரேஸ்வரரைச் சிவலிங்கத்தில் பூஜைசெய்து அதிரசம், சர்க்கரை உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சள் உருண்டை, வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றை வகைக்கு ஒவ்வொன்றாக 21 தினங்களும் நிவேதித்து 21 இழைகள் கொண்ட பட்டு நூலில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முடிச்சாக 21 முடிச்சுக்கள் இடுவர். இறுதி நாள் உபவாசம் இருந்து கையில் தரித்துக் கொள்ள வேண்டும். மறுநாள் பாரணையுடன் நிறைவு செய்து விரத பலன்களைப் பெற்று சுகபோகமிக்க பெரு வாழ்வு வாழ்வோமாக.

★

பிரம்மஸ்ரீ சர்வ. உமாபதிசர்மா

நானாக்கதிர்

இலங்கை இந்து மத குருமாருக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கத்திட்டம்

காஞ்சிகாமகோடி பீடம் ஏற்பாடு

கொழும்பு, ஒக். 9

இலங்கை இந்துமதக் குருமாருக்கு காஞ்சி காமகோடி பீடம் பாரம்பரிய வழி பாட்டு முறைகள் தொடர்பாக விரிவான பயிற்சிகளை அளிக்கத் திட்டமிட்டிருப்பதாக ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் உதவியாளரான ஆர். ஸ்ரீநிவாசன் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலுள்ள இந்துக் குருமார் தல வழிபாட்டு பாரம்பரியங்களில் பெரும் பாலானவற்றைப் பேணி வருகின்ற போதிலும் அவர்களுக்குச் சில வகையான பயிற்சிகள் தேவைப்படுகின்றன என்று ஒன்று அல்லது இரண்டு அணி குருமாருக்கு இந்தியாவில் பயிற்சியை அளித்தால் அவர்கள் ஏனைய குருமார்களுக்கு அப்பயிற்சிகளை இலங்கையில் அளிக்க முடியும். குருமார் இந்தியாவுக்கு மேற்கொள்வதற்கான பயணத்தின் செலவுகளைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய அனுசரணையாளர் ஒருவர் கிடைத்ததும் சாத்தியமான வரவு விரைவாக பயிற்சித் திட்டம் ஆரம்பமாகும். குருமாருக்கான தங்குமிட வசதிகளை காஞ்சி காமகோடி பீடம் செய்து கொடுக்கும் என்று ஸ்ரீநிவாசன் தெரிவித்தார்.

(ஜ-10)

கனகன்புளியடியில்

மழை வெள்ளத்தால் பஸ் சேவை தடங்கல்

பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரிக்கான— கனகன்புளியடிச் சந்திவரைான— பஸ்சேவை செவ்வாயன்று சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் ஊடாகவே நடத்தப்பட்டது.

கனகன்புளியடிச் சந்தி பருத்தித்துறை வீதியில் பாலங்கள் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக வீதியை விட்டு இறங்கி தாழ்வான பகுதிகளூடாகச் செல்லத் தக்க வாறு தற்காலிக வீதி அமைக்கப்பட்டுள்ளது. செவ்வாயன்று பிற்பகல் இவ்விடங்களில் பொழிந்த பெருமழை காரணமாக வெள்ளம் வீதியை மூடிக் கொண்டது. இதனாலேயே பஸ்சேவை இப் பகுதியூடாக நடைபெறுவது தடைப்பட்டது. இதனால் பஸ்ஸில் பயணம் செய்த பிரயாணிகள்பஸ்ஸை விட்டு இறங்கி வீதியில் நடந்து சென்று பின்னர் பஸ்ஸில் ஏறிச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

(ஜ-31)

யாழ். பல்கலையில்

50 விரிவுரையாளர்கள் தற்காலிக நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். பல்கலைக்கழகத்தில் ஒரு தொகுதி விரிவுரையாளர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கலைப்பீடத்துக்கும், விவசாயபீடத்துக்கும் 50-க்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் ஒரு தொகுதி விரிவுரையாளர்கள் விரைவில் தற்காலிகமாக நியமிக்கப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 20 ஆம் திகதியளவில் நடைபெற உள்ள நேர்முகப்பரீட்சையில் இவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(ஜ-9)

நானை

புரட்டாதி - 24
சனிக்கிழமை
திதி: பஞ்சமி
பிற்பகல்: 02.49 வரை
நட்சத்திரம்: ரோகிணி
பிற்பகல் 04.01 வரை
எமகண்டம்: 3.02 - 4.32
ராகுகாலம்: 9.08 - 10.32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

உதயவாக்கு

நோய் இல்லை என்று மனதில் உறுதி செய்.
மனம் போல வாழ்வு அமையும்.
மகாகவி பாரதியார்

320 பேருக்கு கண் பரிசோதனை

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கடந்த திங்களன்று வரணி மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ சிகிச்சை முகாமில் கண்பரிசோதனை செய்யப்பட்ட 320 பேரில் 20 பேருக்கு விழிவெண்படலத்தில் பூப்படர்ந்திருந்ததும், 153 பேருக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை கண்சிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வி ம. சரவணமுத்து கண் பரிசோதனையை நடத்தினார்.

கண்ணில் பாதிப்பு ஏற்பட்டோரில் ஒரு தொகுதியினருக்கு விரைவில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாக கழக பார்வைக்கு முதலிடம் பிரிவுத் தலைவர் லயன் செ. கா. நவரத்தினம் தெரிவித்தார்.

(ஜ-117)

வரவேற்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 9

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் "வரவேற்பாளர்" பதவிக்கு ஆள் ஒளைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்மொழி, இந்துசமயம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியெற்றிருப்பதுடன், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளில் உரையாடும் ஆற்றல் பெற்றவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு தினம் அடுத்த மாதம் 27ஆம் திகதியாகும். விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்குக் குறையாதோரும், 40 வயதிற்கு மேற்படாதோரும் மேற்படி பதவிக்கு தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் உளச்சார்பு, தமிழ் மொழிப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும்.

மேற்படி வரவேற்பாளர் பதவி தொடர்பான விவரங்களும், மாதிரி விண்ணப்பப் படிவங்களும் கடந்த மாதம் 18ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

(ஜ-7)

கூட்டுறவு ஊழியரின் பதிற்கடமை கொடுப்பனவு

அரியாலை, ஒக். 9

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களின் குறைந்தது ஒரு மாதம் பதிற்கடமை பணிபுரிந்தால் மட்டுமே பதிற்கடமைக்குரிய சம்பளம் வழங்கப்படும் என்று வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்.

பதிற்கடமையாற்ற நியமிக்கும் கூட்டுறவு ஊழியர் முழுநேர அங்கீகரிக்கப்பட்ட பதவியைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பதிற்கடமையானது அவர் வகிக்கும் நிரந்தர பதவியை விட உயர்வான தாகவே இருத்தல் வேண்டும்.

இந்த நடைமுறை கடந்த 10-06-97 முதலே நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'லயன் ஏயர்' விமான அனர்த்தம்

பல்கலைகழக மாணவரின் மறைவுக்கு மாணவர் ஒன்றியம் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஒக். 9

கடந்த 29 ஆம் திகதி விபத்துக்குள்ளான 'லயன் ஏயர்' விமானத்தில் பயணஞ் செய்த யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த இமாக்குலேற்றா பெர்னாண்டோ அந்தோனிப்பிள்ளை, எட்வேர்ட் திரேசா அருண்மணி கூஞ்ஞு மற்றும் கலைப்பீடத்தைச் சேர்ந்த வணஜா பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

இந்த விமானத்தில் பயணஞ் செய்த அனைத்து பொது மக்களினது குடும்பங்களுக்கும் மாணவர் ஒன்றியம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது.

டன் இவ் விமானத்தில் பயணஞ் செய்த பொதுமக்களின் நிலை தொடர்பாக அறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பதினரின் துயரத்தில் பங்கு கொள்கிறோம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத்தில் பயணஞ் செய்த அனைத்து பொது மக்களினது குடும்பங்களுக்கும் மாணவர் ஒன்றியம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது டன் இவ் விமானத்தில் பயணஞ் செய்த பொதுமக்களின் நிலை தொடர்பாக அறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ள

யாழ். பல்கலைக்கழகத்திலே 40 சதவீதமான மாணவர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அத்துடன் புதிதாக ஆரம்பமாகவுள்ள கற்கை நெறிகளுக்கு பல மாணவர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்கு வரவேண்டிய நிலையிலிருக்கிறார்கள்.

இந்த நிலையில் உறுதிப் படுத்தப்பட்ட பயண ஒழுங்குகளைச் செய்து தருமாறு துணைவேந்தர் ஊடாக சம்பந்தப்பட்டவர்களைக்கேட்டுக் கொள்கின்றோம் — என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ஐ-5)

மனித உரிமை மீறல்

பொலீஸார் மீது 240 வழக்குகள்

கொழும்பு, ஒக். 9

மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலீஸார் மீது கடந்த 4 வருடங்களில் 240 வழக்குகள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டுள்ளதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

ஐ. தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உபாலி அமரசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் வழக்குகளில் மிகக் கூடுதலானவை மட்டக்களப்பில் கடமையாற்றிய பொலீஸாருக்கு எதிராகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு எதிராக 39 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

20 பொலீஸ் அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. 14 பொலீஸாருக்கு மனித உரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக தண்டனை வழங்கப்பட்டுள்ளது — என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-6)

வழுக்கையாறு பாலம் ஊடாகப் போக்குவரத்து

வலி. தென்மேற்கு, ஒக். 9

நவாலி – வழுக்கையாறு பாலம் நேற்று முதல் பயணிகள் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்டுள்ளது.

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த இப் பாலம் துரித கதியில் சுட்டிமுடிக் கப்பட்டுள்ளது.

இதே வேளை — புதிய பாலம் அமைக்கப் பட்டதால் விவசாயிகள் உரிய மழை நீரை சேமிக்கவும், தேவையற்ற நீரை வெளியேற்றவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

(ஐ – 185)

பதில் அதிபர்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுவோரின் விவரங்களை வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முதல் பதில் அதிபர்களாகக் கடமையாற்றியோரின் விவரங்களே இவ்வாறு கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவித்தல் மாகாணக் கல்வி அமைச்சினால் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-7)

அனுதாபம் தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அறிக்கை

யாழ்ப்பாணம் ஒக். 9

வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினரான கனகசபை இராசதுரையின் மரணம் தொடர்பாக இரங்கல் தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை ஈ. பி. ஆர். எல். எவ் வெளியிட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரான கனகசபை இராசதுரை (46 வயது) அவர்களின் மறைவுக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ச்சியாக நடந்து வரும் ஜனநாயக விரோதப் படுகொலைகளில் இதுதான் தற்போதைக்கு இறுதியானது. எதிதகைய காட்டுமிராண்டித்தனம் எமது சமூகத்தின் மீது கோலோச்சுகிறது என்பதற்கு இது இன்னுமோர் எடுத்துக்காட்டு. இந்தப் படுகொலைத் தாக்குதலுக்கு மக்களோ அல்லது முக்கனால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளோ விதிவிலக்கல்ல. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு எமது சமூகம் மௌனமாக இருப்பது தான் இந்தக் குரூரத்தனமான படுகொலைகளை விடப் பயங்கரமானது.

சமூகத்தின் கௌரவமான பிரஜைகளாக, முக்கியஸ்தர்களாக, அறிவாளிகளாக, மதத்தலைவர்களாக இருப்பவர்கள், கூட இவற்றை யிட்டு மௌனமாக இருப்பதுதான்மிக மிகத் துரதிர்ஷ்டவசமானது.

இப்படுகொலைகளை புரிந்தவர்கள் யாரென்பது யாருக்கும் தெரியாததல்ல. மற்றைய படுகொலைகளைப் போலவே இந்தப் படுகொலையையும் புலிகள் தான் மேற் கொண்டிருக்கிறார்கள் என்பதில் யாரும் சந்தேகம் கொள்ள முடியாது.

அண்மையில் மேயர் சிவபாலன் மற்றும் மாநகர சபை அதிகாரிகளின் படுகொலைகளின் பின்னரி விடுதலை விரும்பிகள் என்ற பெயரில் சில பிரதேச சபைத் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் அனுப்பப் பட்டிருந்தன. அதன் பின்னர் இச் சம்பவம் நடந்துள்ளது.

இது போல் விமான சேவை முகவர்களுக்கு மிரட்டல் கடிதம் எழுதியதன் பின்பே விமானம் வீழ்த்தப்பட்டது.

மக்களே! இப்படுகொலைகளையிட்டு நீங்கள் மௌனமாக இருந்தால் முழுச் சமுதாயத்தையும் அழிப்பதற்கும் இவர்கள் நாளை நியாயம் சொல்வார்கள்.

மக்களும் மனித உரிமை வாதிகளும் எமது சமூகத்தின் மதிப்பிற்குரிய பிரஜைகளும் இனிமேலாவது தங்களது மௌனத்தைக் கலைக்க வேண்டும்— என்று உள்ளது.

(ஐ)

விமானப் பயணிகளின் இழப்பு குறித்து அரசாங்கம் பாராமுகமாக உள்ளது

புளொட் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 9

'லயன் ஏயர்' விமான அனர்த்தத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து அரசு அக்கறை கொள்ளாமல் பாராமுகமாக இருப்பதாக 'புளொட்' அமைப்பின் யாழ். மாவட்ட பிரிவினர் குற்றஞ் சாட்டி உள்ளனர்.

'புளொட்' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபராஜா இது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த வாரம் கிளிநொச்சியிலும், மாங்குளத்திலும் பலியான இராணுவ வீரர்களுக்கு அரசும், ஜனாதிபதி அவர்களும் பிரதான எதிர்க் கட்சியும் அஞ்சலி செலுத்தும் அதேவேளை கடந்த 29-09-98 அன்று 'லயன் ஏயர்' விமானத்தில் பயணம் செய்த 48 பயணிகள் 7 அதிகாரிகள் பலியானது குறித்து அக்கறை கொள்ளாமலிருப்பது வேதனைக்குரியதாகும்.

'சூரியப்பிரகாசம்' இராணுவ நடவடிக்கையின் பின்னர் குடாநாட்டு மக்களின் போக்குவரத்து மார்க்கமாக தொடர்ந்து வந்த விமான சேவையில் சுடுபட்ட விமானம் வீழ்ந்ததில் பலியான வர்கள் சம்பந்தமான விசாரணைகள் துரிதமாக மேற் கொள்வதுடன் குடாநாட்டு மக்களின் கொழும்புப் பயணத்திற்கான ஏற்பாடுகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சமாதானத்திற்கான யுத்தம் என்ற போர்வையில் நாட்டின் இளஞ்சந்ததியினர் இரத்தம் சிந்துவது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இனப்பிரச்சினைக்கு இணக்கப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணப்படும் என்ற அரசு யுத்தத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்று கூறி அரசியல் தீர்வு முயற்சியைக் காலந்தாழ்த்தி வருவதால் நாட்டின் சில பகுதிகளில் இனவாதத்துக்குத் தூபமிடும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகிறது. அண்மையில் நுவரெலியாவில் சிறுபான்மை மக்களுக்கெதிராக பெரும் பான்மை மக்களைத் தூண்டி விடும் பிரசுரமொன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான விசமத்தனமான செயல்களைக் கட்டுப்படுத்தி இனப் பிரச்சினைத் தீர்வுக்கான இணக்கப் பேச்சுக்களை புரிந்துணர்வு விட்டுக்கொடுப்புக்கள் மூலம் ஏற்படுத்தி அரசியல் தீர்வை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

பஸ்சாரதி, நடத்துநர் கைதாகி விடுதலை

வவுனியாவில் இருந்து மன்னாருக்குச் சென்ற போக்குவரத்துச்சபை பஸ் ஒன்றில் தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கடத்தியதாக அந்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநரான எஸ். பரமேஸ்வரனும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் விடுதலை செய்தார்.

(ஐ-3-164)

வடமராட்சி மக்களுக்கொரு மகிழ்ச்சியான நற்செய்தி!

வடமராட்சி மக்களின் எண்ணற்ற வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப்பெற்ற நெல்லியடி

செல்லமுத்துஸ் புடைவை மாளிகையின் 28 ஆம் ஆண்டு நிறைவையொட்டி

தீபாவளிப் பண்டிகைக்கான மலிவு விற்பனை

09-10-98 தொடக்கம் 25-10-98 வரை

நடைபெறுகின்றது என்பதை எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.
நீங்களும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புரியும்.

செல்லமுத்துஸ் புடைவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

(C/5126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட் ஆட்டங்கள்

"ஈஸ்ட் வெஸ்ட்" மார்க்கண்டிங் பிறைவேற் லிமிட்டெட் ஆதரவில் யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் "டோர்க்கி" வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரை இறுதி ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

நாளை சனிக்கிழமை நடை பெறவுள்ள முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் அணி மோதவுள்ளது.

நாளை மறுதினம் நடை பெறவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சென்றலைட்ஸ் "சொக்ஸ்" அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி மோதும்.

இரு போட்டிகளும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு சகல புடைவை வகைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

ஐங்கரன் புடைவை மாளிகை

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

(59761)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

பதவி வெற்றிடம்

கணனிப்பிரயோக உதவியாளர்
[COMPUTER APPLICATIONS ASSISTANT]

ஒப்பந்த அடிப்படையில் கணனிப் பிரயோக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் எம்மால் 1998 ஒக்ரோபர் 30 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பளம் ரூபா 5780 (நிலையானது) மாதம் ஒன்றுக்கு.

தகைமைகள்:

ஆங்கிலம், கணிதம் உட்பட ஐந்து திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி.

அத்துடன்

ஒரு தொகுதி நிகழ்ச்சி முறைகளுக்கு கணனிப் பிரயோகத்தில் பயன்பாடு பற்றி இரண்டாண்டு அனுபவம்.

கணனிப் பிரயோகத்தில் பொருத்தமான தகைமையுடன்குறைந்தபட்ச ஆறுமாத தொழிற் பயிற்சி. பல்கலைக்கழக முறைமையில் இப் பயிற்சியைப் பெற்றிருந்தால் மிகவும் விரும்பப்படும்.

வயது:

45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு:

உளச்சார்பறி தித் தேர்வு நேர்முகத் தேர்வு ஆகிய வற்றின் மூலம்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20 ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியின் அல்லது இப் பல்கலைக்கழகச் சிறாப்பரின் முகப்பு மேசையில் செலுத்தி இப் பல்கலைக்கழக உரிய பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும், இதர விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20 ரூபாகாசுக்கட்டளையுடன் / தபாற்கட்டளையுடன் 23x10 சமீ அளவுடைய சுயமுகவரியிட்டு 2.50 சத முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிகளைப் பெற்று படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். அரசாங்கத் திணைக்களங்கள், அரசுக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விவரங்கள் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
1998-10-02

(சி/5122)

வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 9

ஊர்காவற்றுறையில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம் நடைபெறும்.

ஊர்காவற்றுறை சிறிய புஷ்பம் மகளிர் கல்லூரியில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இந்த பயிற்சி முகாம் நடத்தப்படும்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் கழகங்களுக்கு விளையாட்டு அமைச்சினால் இந்த பயிற்சி முகாம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ)

புறநிலை அலகு விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் நில அளவையும் பட வரைகளையும், ஒளிப்பட தொழில் நுட்பம்— ஆகிய இரு கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் நாளை காலை 9 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற இருக்கின்றன.

இக்கற்கை நெறிகளுக்கு பதிவு செய்த இல. ஒன்று முதல் 50 வரையான பங்கு பற்றுநர்களை அன்று விரிவுரைக்கு சமுகமளிக்குமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (இ-3)

பரிசளிப்பு விழா

கதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-30)

★ ★ ★

ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், உடுவில் பிரதேசசெயலக சமூகசேவை உத்தியோகஸ்தர் வ. செல்வம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-27)

நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 9

இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய திறந்த வெளியில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூற்றாண்டு மலரை வெளியிட்டு வைப்பார். (இ-30)

கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 9

சமூக ஒருமைப்பாட்டுக்கான கல்விக் கருத்தரங்கு தொடர்பான அறிவூட்டலை வலுப்படுத்தும் கருத்தரங்கு கலை பாடசாலை மட்டத்தில் உயர்தர மாணவர்களுக்கு நடத்தும் மசளிர் அபிவிருத்தி நிலையத்தின் திட்டத்தின் கீழ்—

எட்டாவது கருத்தரங்கு இன்று காலை 9.00 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

அருணோதயாக் கல்லூரி அதிபர் மகேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வரவேற்புரை நிகழ்த்துவார்.

முரண்பாடுகளினால் ஏற்படும் சமூக கலாசார பின்னடைவுகள், முரண்பாடுகளுக்கான காரணிகள், முரண்பாடுகளற்ற சமூகத்தை உருவாக்குவதில் பாடசாலைகளின் பங்கு ஆகிய விடயங்கள் இந்தக் கருத்தரங்கில் ஆராயப்படும்.

திருமதி பகிரதி கணேசதுரை (ஆசிரியை, கிரிமலை நகுலேஸ்வரர் மகா வித்தியாலயம்), திருமதி கோகிலா மகேந்திரன் (அதிபர், சைவப் பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை), எஸ். சிவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

அனுமதிப் பரீட்சை

பல்தொழிற்பட்ட கல்விக் கல்லூரிக்கு பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சை நாளை நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாசாலையில் நடைபெறும்.

ஆங்கிலத்தில் தகுதிகாண் பரீட்சை நடைபெறும் என்றும் —

தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் — வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் எஸ். என். தனிகாசலம்பிள்ளை தெரிவித்துள்ளார். (இ-3)

கண்ணீர் அஞ்சலி

எமது இளை முகாமையாளர்
திருவாளர் சி.கிருஷ்ணானந்தன்
அவர்களின் அன்புத் தந்தையாரும்
குரும்பசுட்டி புலோலியைச் சேர்ந்தவருமான
கிட்டினர் சிதம்பரப்பிள்ளை
அவர்கள்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், வைத்தியர், சோதிடர்) 08.10.98 இல் காலமானதையிட்டு அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்
இலங்கைவங்கி,
மானிப்பாய்.

(59766)

மரண அறிவித்தல்

கிட்டினர் சிதம்பரப்பிள்ளை
(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

குரும்பசுட்டி, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த கிட்டினர் சிதம்பரப்பிள்ளை (ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்) நேற்று (08-10-98) காலமானார்.

அன்னார் திருமதி சி. தெய்வானையின் அன்புக் கணவரும், கி. கிருஷ்ணானந்தன் (முகாமையாளர், இலங்கை வங்கி, மானிப்பாய்), கி. சிவச்சந்திரன் (முகாமையாளர் தெங்கு அபிவிருத்திச்சபை, வடபிராந்தியம்), திருமதி சு. விமலாதேவி, சி. வெற்றிவேல் (உரிமையாளர் வெற்றி றெடிமேட்ஸ்), சி. செந்தில் நேசன் (சுதேச வைத்தியர்), சி. நில்லைநாதன் (ஆசிரிய ஆலோசகர், பருத்தித்துறைக் கல்விக்கோட்டம்), கி. தவலிங்கம் (இலங்கை வங்கி, சாவகச்சேரி), சி. இந்திரலிங்கம் (பொறியியலாளர், சிங்கப்பூர்), சி. நவலிங்கம் (பொறியியலாளர் சுதந்திர வர்த்தக வலயம் — கட்டுநாயக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சு. சதிர்காமத்தம்பி (ஓய்வு பெற்ற தபால் திபர், ஆங்கில ஆசிரியர் நெல்லியடி மகா வித்.), திருமதி கி. நிலகவதி, திருமதி சி. விமலாதேவி, திருமதி வெ. இராஜேஸ்வரி, திருமதி செ. சாந்தினி, திருமதி நி. செல்வராணி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி—பருத்தித்துறை), திருமதி சு. பாமா (தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை), திருமதி இ. உதயராணி (பல் வைத்தியர், பேராதனை), அமரர் திருமதி நி. மதிவதனி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 09-10-98 வெள்ளிக்கிழமை குரும்பசுட்டி புலோலியில் நடைபெற்று பூதவுடல் கரகம்பன் (புலோலி) மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. கிருஷ்ணானந்தன்
(மகன்)

குரும்பசுட்டி,
புலோலி.

(59762)

SALE SALE — இன்று முதல் — SALE SALE

ரம்மியாஸின் தீபாவளி விசேட தள்ளுபடி விற்பனை

ஆடவர்களே! உங்களுக்கான தனிக் காட்சியறையில் நீங்கள் விரும்பித் தெரிவு செய்திடும்
★ றெடிமேட் ரவுசர் ★ சேட் வகை ★ ரீ சேட் ★ சூட்டிங் ★ சேட்டிங்
மங்கையர் மனம் விரும்பித் தெரிவுசெய்திடும் பலரக தரமான
★ பட்டுச் சாறிகள் ★ ஸ்கேட் அன் பிளவுஸ் ★ துணிவகைகள்
குழந்தைகளுக்கான அனைத்து றெடிமேட் ஆடைவகைகளும், இன்னும்பல ஆடைத் தெரிவுகளுக்கும் நாடுங்கள்

ரம்மியாஸ் சில்க்ஸ்

121, பின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(59769)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரதேசசபைத் தலைவர் 3 உறுப்பினர் குண்டுத்தாக்குதலில் காயமடைந்தனர்

மஹியங்கனையில் சம்பவம்

கொழும்பு, ஒக். 9

மஹியங்கனைப் பிரதேச சபைத் தலைவர் ஜே. ஸ்ரீரும பெரும மற்றும் மூன்று பிரதேசசபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றில் காயமடைந்தனர்.

காயமடைந்த நான்கு பேரும் நேற்று பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதே வேளை —

மேற்படி குண்டுத் தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரை மஹியங்கனைப் பொலீஸார் நேற்றுக் கைதுசெய்து பதுளை நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

மேற்படி இரு சந்தேக நபர்களையும் ஒக்டோபர் முதலாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதுளை நீதிவான் உத்தரவிட்டார். (இ-7-ரி)

கப்பலில் செல்ல 856 பேர் நேற்றுப் பதிவு

வெளியிடங்களுக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டதால் கப்பலில் செல்ல 856 பேர் நேற்று சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவுகளைச் செய்தனர்.

இன்னும் சில தினங்களில் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்குச் செல்ல இருக்கும் 'வாதுவ' கப்பலில் இவர்கள் அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

வட.-கிழக்கில் கைதாவோரை அங்கேயே தடுத்துவைக்கவும்

ஜனாதிபதிக்கு நேற்று "பக்ஸ்" செய்தி

கொழும்பு, ஒக். 9

வடக்கு—கிழக்கில் கைது செய்யப்படுபவர்களை அங்கேயே தடுத்து வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ச.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் நேற்று அனுப்பிய 'பக்ஸ்' செய்தியிலேயே இப்படிக் கேட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு-கிழக்கில் கைது செய்யப்படுபவர்கள் தெற்கில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படுகின்றனர் இதன் காரணமாக அவர்களை அவர்களது உறவினர்கள் சென்று பார்ப்பதில் பல சிரமங்களை அவர்கள் எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன் வழக்குகளில் பிணையில் செல்பவர்கள் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராக போக்குவரத்து பிரச்சினை உள்ளது. அவ்வாறு நீதிமன்றத்தில் சமுகமளிக்கப்படுவதில்லை.

காதவர்கள் மீளக் கைது செய்யப்படுகின்றனர்.

இந்த நிலையைத் தவிர்க்க வடக்கு - கிழக்கில் கைது செய்யப்படுபவர்களை அங்கேயே தடுத்து வைக்கப்பட வேண்டும் — என்று கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

சிறந்த தொழில் உரிமையாளர் யாழ். நிறுவனம் ஒன்றும் விருது பெறத் தெரிவு

1997 இல் சிறந்த தொழில் உரிமையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு இன்று மாலை 6 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டில் உள்ள வர்த்தக தொழில்துறை சம்மேளனங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் சிறந்த— மிகச் சிறிய, சிறிய, நடுத்தர, பெரிய, மிகப் பெரிய அளவில் — தொழில் உரிமையாளர்களுக்கு விருது வழங்கும் போட்டி நடத்தப்பட்டது.

இந்தப் போட்டியில் வடமாகாணத்தில் சிறிய தொழில் உரிமையாளர்களுக்கான தங்கப் பதக்கம் நல்லூர், சங்கிலியன் தோப்பில் இயங்கும் 'யூரோவில் பொறியியலாளர், நிர்மாணிகள்' ஸ்தாபனத்துக்கு வழங்கப்படுகின்றது.

கொழும்பில் இன்று நடைபெறும் விருது வழங்கும் நிகழ்வில் காணி, விவசாய அமைச்சர் டி. எம். ஜயரத்ன, தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரட்ண, உள்ளூர், வெளி நாட்டு வர்த்தகம், உணவு அமைச்சர் ரி. கிங்ஸ்லி விக்கிரமரத்ன ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (உ)

நூல் வெளியீடு

சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை, தெல்லிப்பளைக் கல்விக் கோட்டங்களின் மனைப் பொருளியல் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து தயாரித்த 'மனைப் பொருளியல்' நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (இ-7)

வவுனியாவில் ஐவர் கைது

வவுனியா, ஒக். 9

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா தாண்டிக்குளம் விவசாய விதை உற்பத்திப் பண்ணைக்கு முன்பாக இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து அப்பண்ணையில் பணி புரியும் ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

இதனை அடுத்து அந்தப் பண்ணையில் பணிபுரியும் 50 தொழிலாளர்கள் வேலைக்கு செல்ல அச்சம் தெரிவித்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். (இ-3-164

வன்னிச்சமர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த யுத்தம் சந்திக்கிறது; வெல்ல முடியாத யுத்தத்தை நிறுத்தி உடனடியாக விடுதலைப்புலிகளுடன் பேசவேண்டும் என்று தாம் வற்புறுத்த விருப்பதாகவும் —

இதற்காகப் பல நியாயங்களை எடுத்துக் கூறவிருப்பதாகவும் — நேற்றிரவு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட விவாதம் குறித்து ச.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டபோது, வழமை போன்று அரசுடன் இணைந்து வாக்களிக்கப்போவதாகத் தெரிவித்தார்.

"அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக நாம் வாக்களிப்பதன் மூலம் எதையும் சாதிக்கமுடியுமானால் எதிர்த்து வாக்களிக்கலாம். நாம் எதிர்த்து வாக்களிப்பதன் மூலம் அரசுக்குப் பாதிப்பு ஏற்படப் போவதில்லை. மக்களுக்கான சேவையைத் தொடர அரசுக்கு ஆதரவு வழங்கவேண்டி உள்ளது. இது தொடர்பாக ஆராய்ந்து முக்கிய முடிவை விரைவில் எடுப்போம்" என்றார் அவர்.

புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனுடன் தொடர்பு கொண்டபோது, தமது கட்சி வழமைபோல் அரசுக்கு எதிராக வாக்களிக்கும் என்று தெரிவித்தார். (இ-3)

விநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

15 இலோ எடையும் 17 அங்குல உயரமும் கொண்ட இந்தச் சிலை சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து முன்னேஸ்வரத்துக்குக் கொண்டுவரப்பட்டது என்று தெரிவிக்கப் படுகிறது.

முன்னேஸ்வரம் கோயில் பிரதம குருக்களுக்கு அண்மையில் அனாமதேயக் கடிதம் ஒன்று கிடைத்தது எனவும்—

அக்கடிதத்தில் காணாமற் போன விநாயகர் சிலை இருக்குமிடம் பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன என்றும் —

அக்கடிதத்தைப் பிரதம குருக்கள் பொலீஸாரிடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்தே சிலை மீட்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10-7)

யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணமா?" — என்று ஒரு சுவரொட்டியில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

"மனத்தடைகளை அகற்றுங்கள்; மனச்சாட்சி பேசட்டும்" — என்று ஒரு சுவரொட்டி தெரிவித்தது.

"நாங்கள் வேண்டுவது சமாதானம்; ஆயுதக் கலாசாரம் அல்ல" என்றும் —

"இது நாட்டுப்பற்றல்ல; இது வீடுதலை அல்ல; இது படுகொலை" என்றும் —

வேறு இரு ஆங்கில மொழி மூல சுவரொட்டிகள் தெரிவித்தன. (உ-9)

கல்வித்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

குமாரன் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி) ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

மகளிர் அபிவிருத்திநிலைய இணைப்பாளர் திருமதி புஸ்பா கின்னையா கருத்தரங்கினை நெறிப்படுத்துவார். [3]

வன்னியில் கடும்மழை

வவுனியா, ஒக். 9

வன்னிப்பகுதியில் பரவலாக நேற்று கடும்மழை பெய்ததாக தெரிவிக்கப்பட்டது.

பல குளங்களின் நீர் மட்டம் உயர்ந்து காணப்பட்டது. (3-164)

பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்)

தனது ராஜினாமாக் கடிதத்தை ச.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் — ச.பி.டி.பி. சார்பாக உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினர் பதவிக்கும் பொதுமக்கள் தமது பாதுகாப்பை முன்னிட்டு பதவிகளில் இருந்து விலகலாம் என்று தாம் அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக ச.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வி. கே. ஜெகன் தெரிவித்தார். (இ-3-109-173)

இறந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

பதாகவும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சண்டையின்போது 25 இராணுவக்காரர்களும், ஏனைய தரங்களைச் சேர்ந்த 401 படையினரும் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சண்டையில் இறந்த மற்றும் காயமடைந்த படையினர் தொடர்பான விவரங்களை அவர்களது பெற்றோர் பெறுவதற்காக நான்கு தகவல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நிர்வாகப்பிரிவு, பணிப்பகம், சம்பளம் மற்றும் விடுமுறைப் பணியகம், 21 ஆவது படையணி தலைமையகம், ஆள்சேர்ப்பு பணிப்பகம் ஆகியவற்றிலேயே அந்தத் தகவல் மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-21)

வாடிக்கையாளர்களே!

ஒரு வருட பூர்த்தியையிட்டு

'நல்லி சில்க்ஸின்'

மலிவு விற்பனை

சாறிகள் ஸ்கேட், பிளவுஸ், சேட் வகைகள், ரீ சேட்கள், ரவுசர் துணிகள்

அனைத்தும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்ள!

ராசி சில்க்ஸ்
70A, 71, தவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ எமக்கு யாழ். நகரில் வேறு கிளை ஸ்தாபனங்கள் இல்லை எனபதை அறியத்தருகின்றோம்.

(சி/5125)

CHEAP SALE ! CHEAP SALE !!

தீபாவளி விசேட மலிவு விற்பனை!

சீமாட்டி

(புடைவைக் கடல்)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சீமாட்டி புடைவைக் கடலின் அனைத்துப் புடைவைகளும் எங்கும் கிடைக்காத விசேட மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன;

★ புத்தம் புதிய டிசைன்களில் சாறி வகைகள் ரூபா 260/- இலிருந்து ரூபா 700/- வரை!
★ கொழும்பு ஒஷானிக் இம்பெக்ஸ் அனுசரணையுடன் ஒரிஜினல் கிப்ஸ் சாரங்கள், பெனியன்கள், லேஞ்சிகள்,
★ பாபறா, ஜோ ஜோ, இன்னர் கூலர், பட்டர் சில்க் செக் துணிவகைகள்,
★ சேட்டிங் சூட்டிங் வகைகள்,
★ வேட்டி சால்வைகள்,
★ இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் றெடிமேட் அயிட்டங்கள்

இன்னும் பலப்பல தினுசுகள்!

மொத்தமாகக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு!

சுபமுகூர்த்தப் புடைவைகளின் களஞ்சியான நிறுவனம்;

இன்றே நாடுங்கள்;

சீமாட்டி

[புடைவைக் கடல்]
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021 - 2196

"இலக்கம் 15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்" என்ற முகவரில் அமைந்திருக்கும் எமது கிளையான

'மங்கை சில்க்' இலும்

இதே மலிவு விற்பனை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(சி/5120)

BOSCO
25, றக்கா றோட்.
Spoken English
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
மாலை 3.00 — 4.00
Sat. Sun.
(59770)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org